# தேர்வுக்கு தயார் செய்வது எப்படி?

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்டுள்ள எதிர்காலத்தில் நடைபெற உள்ள தேர்விற்கான அட்டவணையில் (Annual Planner) மே மற்றும் ஜூன் மாதங்களில் முறையே தொகுதி IIA மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான (வி.ஏ.ஓ) எழுத்து தேர்வு நடைபெறும் என கூறப்பட்டுள்ளது.

இதன்படி தொகுதி 2 ஏ (குரூப் 2 ஏ) பணிக்கான 2269 காலி இடங்களுக்கான அறிவிப்பு கடந்த வாரம் வெளியானது.

தமிழ் நாட்டின் பணிபுரியும் வாய்ப்பு, தமிழ்மொழியிலேயே தேர்வு, மற்ற தேர்வுகளில் இருப்பது போன்று கடினமான கணக்கு கேள்விகள் மற்றும் மிரட்டும் ஆங்கில கேள்விகள் எதுவும் இல்லை என்பது வி.ஏ.ஓ. உள்ளிட்ட தேர்வுகளின் சிறப்புகளில் குறிப்பிடத்தக்கது. எனவே பயம், தயக்கம் போன்றவற்றை விட்டுவிட்டு வெற்றி என்ற இலக்கை மட்டும் குறிவைத்து முழுமனதுடன் முயற்சி செய்தால் இந்த தேர்வில் ஜெயிப்பது நிஜம்.

ஆனாலும் லட்சக்கணக்கானோர் போட்டி போடும் இந்த தேர்வில் நான் எப்படி வெற்றி பெற முடியும் என்று சிலர் நினைக்கலாம். சிலருக்கு ஆர்வம் இருக்கலாம். ஆனால் தேர்வு முறை குறித்த தகவல்கள் தெரியாமல் இருக்கலாம். என்ன பாடங்கள் படிக்க வேண்டும், எப்படி படிக்க வேண்டும்? என்ற தடுமாற்றங்கள் காணப்படலாம்.

இதுபோன்ற பல்வேறு குழப்பங்கள், தடுமாற்றங்களுடன் உள்ளவர்களுக்கு வழிகாட்டுகிறது தினத்தந்தி. கிராமப்புற மாணவர்கள் உள்பட அனைத்து தரப்பு மாணவர்களுக்கும் உதவிடும் வகையில் இத்தேர்வுகளுக்கு உரிய மாதிரி வினா–விடை பகுதியை தினத்தந்தியும், சென்னை அப்பல்லோ பயிற்சி மையமும் இணைந்து வழங்குகிறது.

உங்கள் அரசு வேலை கனவை நனவாக்கும் வகையில் அப்பல்லோ பயிற்சி மையத்தின் இயக்குனர் ஆர். சாம்ராஜேஷ்வரன் தலைமையிலான அனுபவம் மிக்க குழுவினர் இந்த மாதிரி வினா–விடைகளை தயாரித்து அளிக்கின்றார்கள்.

தினத்தந்தியில் இன்று முதல் தினமும் வெளியாகும் இந்த மாதிரி வினா–விடை பகுதியை தொடர்ந்து படித்து வந்தால் உங்கள் அரசு வேலை கனவு எளிதில் நனவாகும்.

மேற்காணும் தேர்வுகளுக்கு தயார் செய்வது எப்படி, என்ன பாடத்திட்டம், தேர்வு முறை, கேள்வித்தாள் எப்படி அமையும்? எந்த பாடப்பகுதிகளை படிக்க வேண்டும்? அதில் இருந்து கேள்விகள் எப்படி கேட்கப்படலாம்? தேர்வில் கேள்விகள் எப்படி அமைந்திருக்கும்? என்பது உள்பட உங்களது பல்வேறு சந்தேகங்களை தெளிவுபடுத்தும் நோக்கில், இந்த மாதிரி வினா விடை பகுதி அமைந்திருக்கும்.

முதலில் நாம் எந்த தேர்விற்கு தயார் செய்தாலும் அத்தேர்விற்கான பாடத்திட்டத்தையும், தேர்வுமுறையையும் அறிந்திருக்க வேண்டும்.

### பாடத்திட்டம்

தொகுதி IIA மற்றும் கிராம நிர்வாக அலுவலர் தேர்விற்கான பாடத்திட்டம் பற்றிய விவரம் பின்வருமாறு:-

| தொகுதி IIA | | கிராம நிர்வாக அலுவலர் | |
|---|---|---|---|
| பாடம் | மதிப்பெண்கள் | பாடம் | மதிப்பெண்கள் |
| 1. பொது அறிவு 100 வினாக்கள் (பொது அறிவு 75 வினாக்கள் + அறிவுக்கூர்மை 25 வினாக்கள்) | 150 | 1. பொது அறிவு 95 வினாக்கள் (பொது அறிவு 75 வினாக்கள் + அறிவுக்கூர்மை 20 வினாக்கள்) | |
| 2. பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் (100 வினாக்கள்) | 150 | 2. பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் (80 வினாக்கள்) | 300 |
| மொத்தம் | 300 | 3. அடிப்படை கிராம நிர்வாகம் (25 வினாக்கள்) | |

மேற்கண்ட தேர்வுகள் இரண்டிற்கும் முறையே தேர்வு நேரம் 3 மணி நேரமாகும். தொகுதி IIA தேர்வில் பொது அறிவுக் கேள்விகள் இளங்கலை பட்டப்படிப்பு தரத்திலும், கிராம நிர்வாக அலுவலர் தேர்வில் பொது அறிவுக் கேள்விகள் பத்தாம் வகுப்பு தரத்திலும் அட்டவணையில் காணப்படும் எண்ணிக்கையில் கேள்விகள் கேட்கப்படும். பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் பத்தாம் வகுப்பு தரத்தில் கேட்கப்படும்.

**அலகு – I பொது அறிவியல்** (General Science)

i. இயற்பியல் (Physics)
ii. வேதியியல் (Chemistry)
iii. தாவரவியல் (Botany)
iv. விலங்கியல் (Zoology)

**அலகு – II – பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்ச்சிகள்:** (General Knowledge and Current Affairs)

**அலகு III – புவியியல்** (Geography)

i. புவியியல் கோட்பாடுகள் (Geographical Theory)
ii. இந்திய புவியியல் (Geographical Theory)
iii. தமிழ்நாட்டு புவியியல் (Geography Tamil Nadu)

**அலகு – IV – இந்திய வரலாறு மற்றும் பண்பாடு**

i. பழங்கால வரலாறு (Ancient India)
ii. இடைக்கால வரலாறு (Medieval India)
iii. தற்கால வரலாறு (Modern India)
iv. இந்திய பண்பாடு (Indian Culture)

**அலகு V – இந்திய அரசியலமைப்பு** (Indian Polity)

**அலகு VI – பொருளாதாரம்** (Economy)

i. இந்தியப் பொருளாதாரம் (Indian Economy)
ii. தமிழ்நாட்டுப் பொருளாதாரம் (Tamil Nadu Economy)

**அலகு – VII இந்திய தேசிய இயக்கம்** (Indian National

i. 1857 – பெருங்கிளர்ச்சி (1857 Revolt)
ii. இந்திய தேசியகாங்கிரஸ் (Indian National Congress)
iii. தேசிய தலைவர்கள் எழுச்சி (Emergence of National Leaders)
iv. சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு (Role of Tamil Nadu in Freedom Struggle)

**அலகு VIII – அறிவுக்கூர்மை, காரணமறிதல் மற்றும் கணிப்பொறி அறிவு.** WWW.PADASALAI.NET

(Mental Ability, Reasoning and Computer Awareness)

i. புள்ளியியல் – (Statistics)

ii. அறிவுக்கூர்மை – சதவீதம், மீ.சி.ம. மீ.பெ.வ. விகிதம் மற்றும் வீதம், தனிவட்டி, கூட்டுவட்டி, நேரம் மற்றும் வேலை, அளவியல்

iii தர்க்கமுறையில் காரணமறிதல் (Logical reasoning) – கனசதுரம், பகடை சம்பந்தமான கேள்விகள், திசை அறிதல், Coding and decoding) எண்வரிசைகள், எழுத்து மற்றும் எண் சம்பந்தமான கேள்விகள், இரத்த உறவு தொடர்பான கேள்விகள். கொடுக்கப்பட்ட படத்தில் விடுபட்ட எண்ணைக் கண்டறிதல் (Visual Reasoning)

### பொதுத் தமிழ்

பொதுத்தமிழில் கேட்கப்படும் 100 வினாக்களுக்கான பாடப்பகுதிகள் பின்வருமாறு:

• பகுதி – அ (இலக்கணம்) – இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்

• பகுதி – ஆ (இலக்கியம்) – இப்பகுதியில் 10 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

• பகுதி – இ (தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்) – இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

### பொது ஆங்கிலம்

பொது ஆங்கிலத்தில் கேட்கப்படும் 100 வினாக்களுக்கான பாடப்பகுதிகள் பின்வருமாறு:

• **Part A (Grammar)** – இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்

• **Part – B (Literature)** – இப்பகுதியில் 10 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

• **Part – C (Authors and Their Literary Works)** – இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

(**குறிப்பு:** விரிவான பாடத்திட்டத்திற்கு www.tnpsc.gov.in என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பார்த்துக் கொள்ளவும்.)

### பொது அறிவு

தொகுதி – IIA தேர்வில் பொது அறிவு பாடத்திட்டத்திலிருந்து 100 வினாக்களில் 75 வினாக்கள் பொது அறிவியல், வரலாறு, அரசியல், பொருளாதாரம், புவியியல், பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்வுகள் ஆகிய பகுதிகளிலிருந்து கேட்கப்படும்.

அறிவுக்கூர்மை மற்றும் காரணமறிதல் பகுதியிலிருந்து மட்டும் 25 வினாக்கள் கேட்கப்படும். மொத்தம் 100 வினாக்கள் கேட்கப்படுகின்றன.

பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் பாடத்திட்டத்திலிருந்து 100 வினாக்கள் கேட்கப்படுகின்றன.

### வி.ஏ.ஓ. தேர்வு

கிராம நிர்வாக அலுவலர் (VAO) தேர்வில் பொது அறிவு பாடத்திட்டத்திலிருந்து 95 வினாக்கள் கேட்கப்படும். இதில் 75 வினாக்கள் பொது அறிவியல், வரலாறு, அரசியல், பொருளாதாரம், புவியியல், பொது அறிவு மற்றும் நடப்புநிகழ்வுகள் ஆகிய பகுதியிலிருந்து கேட்கப்படும். அறிவுக்கூர்மை மற்றும் காரணமறிதல் பகுதியிலிருந்து 20 வினாக்கள் கேட்கப்படும். மொத்தம் 95 வினாக்கள் கேட்கப்படும்.

பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் பாடத்திட்டத்திலிருந்து 80 வினாக்கள் கேட்கப்படும்.

இத்தேர்வின் பாடத்திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அடிப்படை கிராம நிர்வாகம் என்ற பாடத்தலைப்பிலிருந்து 25 வினாக்கள் கேட்கப்படும்.

மேற்கண்ட இரண்டு தேர்வுகளிலும் அறிவுக்கூர்மை மற்றும் காரணமறிதல் பகுதியிலிருந்து 20–க்கும் மேற்பட்ட வினாக்கள் கேட்கப்படுவதால் இப்பகுதியில் சிறந்த முறையில் பயிற்சி மேற்கொண்டிருக்க வேண்டியது மிக அவசியம்.

### படிக்க வேண்டிய புத்தகங்கள்

மேற்கண்ட பாடத்திட்டத்திற்கு தேவையான புத்தகப்பட்டியல் விவரம் பின்வருமாறு:

**I. பொது அறிவு**

1. 6 முதல் 10–ம் வகுப்பு வரை உள்ள (சமச்சீர் பாடப்புத்தகங்கள்) அறிவியல் (Science), சமூக அறிவியல் (Social Science), கணிதம் போன்ற புத்தகங்கள்.
2. பொது அறிவு களஞ்சியம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள்.
3. தினமும் செய்தித்தாள் படிக்கவும்.

**II. திறனறித் தேர்வு** (Aptitude & Mental Ability)

1. 8, 9, 10th Standard Mathematics (Samacheer) – புள்ளியியல் பாடம் மட்டும்.
2. பயிற்சி நிறுவன கையேடுகள்.

**III. பொதுத் தமிழ்**

1. தமிழ் இலக்கணம் (6 முதல் 10ம் வகுப்பு வரையிலான சமச்சீர் பாடத்திட்டம்)
2. தமிழ் பாடம் – (6 முதல் 10ம் வகுப்பு வரையிலான சமச்சீர் பாடத்திட்டம்)
3. தமிழ் இலக்கிய வரலாறு புத்தகங்கள்.
4. பொதுத்தமிழ் களஞ்சிய தகவல் புத்தகங்கள்.

**தேர்வில் கேட்கப்படும் கேள்வியின் மாதிரி வடிவம், தேர்வில் வெற்றி பெற வழிகள் போன்ற தகவல்களை**

# கேள்வித்தாள் விவரம்

**தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி IIA மற்றும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான (வி.ஏ.ஓ) எழுத்து தேர்வுக்கான பாடத்திட்ட அட்டவணை, ஒவ்வொரு பாடப்பகுதியில் இருந்தும் கேட்கப்படும் கேள்விகளின் எண்ணிக்கை குறித்த விவரங்களை நேற்று பார்த்தோம். தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகளின் மாதிரி வடிவம், எவ்வாறு படிப்பது? தேர்வில் வெற்றி பெறுவதற்கான வழிகள் பற்றி பார்ப்போம்.**

### தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகளின் தரம்

தற்பொழுது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகள் கீழ்க்காணும் மாதிரி வடிவங்களில் கேட்கப்படுகின்றன.

### மாதிரி – I – நேரடி கேள்விகள்

ஒருநிகழ்வு நடந்த வருடம், அதனோடு தொடர்புடைய பிரபலங்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தொடர்புடைய துறை, வரலாற்று நிகழ்வுகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் போன்ற பகுதிகளில் இவ்வகையான வினாக்கள் கேட்கப் படுகின்றன.

உதாரணமாக...

**இந்தியாவில் மிக அதிக அளவில் இரும்புத்தாது கிடைக்கும் மாநிலம் எது?**

a. மத்தியபிரதேசம் b. அந்திரபிரதேசம்
c. உத்திரபிரதேசம் d. ஒரிசா

**மாதிரி – II – பின்வரும் கூற்றுகளில் சரியானவை அல்லது தவறானவை எது**

இம்மாதிரி கேள்விகளில் கூற்றுகள் வரிசையாக கொடுக்கப்பட்டு அவற்றில் சரியானவை எது அல்லது தவறான கூற்று எது என கேட்கப்படும். அதை பொருத்து விடையளிக்க வேண்டும்.

உதாரணமாக

கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:

I. அணுசக்தி ஆணையம் ஹோமி ஜெ. பாபா என்பவர் தலைமையில் நிறுவப்பட்டது. நாட்டில் மேற்கொள்ளப்படும் அணுசக்தி நடவடிக்கைகள் குறித்த கொள்கையை இது வகுக்கிறது.

II. 1956–ல் முதலாவது அணுசக்தி நிலையம் பம்பாய்க்கு அருகிலுள்ள டிராம்பேயில் அமைக்கப்பட்டு நடைபெறுகிறது.

இவற்றுள் எவை சரி:

a. I மட்டும் b. II மட்டும்
c. I மற்றும் II d. I-ம் இல்லை II-ம் இல்லை

**மாதிரி – III – பொருத்துக:**

இம்மாதிரியில் இரண்டு பட்டியல்கள் கொடுக்கப்பட்டு அவற்றில் முதல்பட்டியலை இரண்டாவது பட்டியலோடு பொருத்தி பார்த்து, பொருந்தமான விடையை தேர்வு செய்து அதற்கான விடையை குறித்துக் காட்ட வேண்டும்.

உதாரணமாக

A. அஸ்ஸாம் – 1. பொன்னம்
B. ஒரிசா – 2. மாசன்
C. ஆந்திரபிரதேசம் – 3. ஜீம்
D. கேரளா – 4. பொடு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 4 | 3 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 3 | 4 | 2 | 1 |

**மாதிரி – IV – எவை சரியானவை எவை சரி அல்லாதவை**

கீழ்க்கண்ட இணைகளில் சரியாக பொருத்தப்பட்டுள்ள அல்லது தவறாக பொருத்தப்பட்டுள்ள இணை எது என்ற வடிவில் இருக்கும். அதனை பொருத்த நாம் விடையளிக்க வேண்டும்.

உதாரணமாக

கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருந்துகிறது?

a. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் – வேலைவாய்ப்பை உருவாக்குதல்
b. ஏழாவது ஐந்தாண்டு திட்டம் – வறுமை ஒழிப்பு மற்றும் சுயசார்பு
c. எட்டாவது ஐந்தாண்டு திட்டம் – 2000–ல் முழு வேலைவாய்ப்பை சாதிக்கும் வேலையை உருவாக்குதல்
d. பத்தாவது ஐந்தாண்டு திட்டம் – சமூக நீதியுடன் வளர்ச்சி மற்றும் சமத்துவம்

**மாதிரி V – கூற்றும், காரணமும்:**

கூற்று ஒன்று கொடுக்கப்பட்டு அதற்கான காரணமும் கொடுக்கப்பட்டிருக்கும். இம்மாதிரி வடிவ கேள்விகளில் முதலில் கொடுக்கப்பட்டுள்ள கூற்றிற்கான காரணம் பொருத்தமான உள்ளதாக என்பதை உணர்ந்து அதற்கேற்றார் போல் விடையளிக்க வேண்டும்.

இத்தேர்வில் வினாக்கள் உங்களின் நினைவுத்திறன், பகுத்தறியும் திறன், பொது அறிவு, தெளிவான நிலைபாடு போன்றவற்றை சோதனை செய்யும் வகையில் கேட்கப்படுகின்றன.

உதாரணமாக

கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:

கூற்று (A): பிரெஞ்சு அறிஞரான டிரேசி என்பவரால் கருத்தியல் சொல்லாக்கம் செய்யப்பட்டது

காரணம் (R): மக்களுடைய இலட்சியங்கள், உரிமைப்பாடுகள்

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடு.

a. (A) மற்றும் (R) இரண்டும் தவறு. மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

b. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம் WWW.PADASALAI.NET

c. (A) சரி, ஆனால் (R) தவறு

d. (A) தவறு, ஆனால் (R) சரி.

### தேர்வில் வெற்றி பெற வழிகள்

**1. லட்சிய வேட்கை** (Ambition)

இத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று பதவிகளை அடைதல் வேண்டும் என்ற லட்சியம் மனதில் என்றும் இருக்க வேண்டும்.

**2. கால அளவு** (Time Limit)

இத்தேர்விற்குரிய பாடத்திட்டம் (Syllabus) மற்றும் புத்தகப் பட்டியல்களைப் பார்த்து எவ்வளவு நாட்களில் நம்மால் படித்து முடிக்க முடியும் என்று திட்டமிட வேண்டும். அனைத்துப் பாடத்தையும் படித்து முடிக்க கால அட்டவணை (Time Table) தயாரிக்க வேண்டும்.

ஏதேனும் பணியில் உள்ளவர்கள் ஒரு நாளைக்கு 4 முதல் 5 மணி நேரம் தயார் செய்ய வேண்டும். முழுநேரமும் இத்தேர்விற்காக படிப்பவர்கள் என்றால் 10 முதல் 12 மணி நேரம் தயார் செய்ய வேண்டும். இதற்கு ஒரு கால அட்டவணை (Time Table) தயாரிக்க வேண்டும்.

**3. வழிகாட்டுதல்கள்** (Guidelines)

கடைசியாக நடைபெற்ற தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களிடம் ஆலோசனைகள் பெற வேண்டும். அவர்களுடைய அனுபவம், படிக்கும் முறைகள் போன்றவைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதுபோல சென்ற வருடங்களில் இத்தேர்வை எழுதி தோல்வி அடைந்தவர்களையும்சந்தித்து அவர்களது ஆலோசனைகளையும் பெற வேண்டும். அவர்களுடைய அனுபவம், தோல்விக்கான காரணங்கள் போன்றவைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**4. பயிற்சி மையங்களின் பங்கு**

இதில் சில முக்கிய கல்வி நிறுவனங்கள் பத்தாண்டுகளுக்கும் மேற்பட்டு பயிற்சி அளித்து வருகிறது. இதுபோன்ற பயிற்சி நிறுவனங்களின் கையேடுகள் பெரிதும் உதவும்.

**5. எவ்வாறு படிப்பது?** (How to study)

i. இத்தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் கொள்குறி வகையாக இருப்பதால் (Objective Type Questions) இக்கேள்விகளை மட்டும் முதலில் படிக்கக் கூடாது.

ii. முதலில் பள்ளி பாடப்புத்தகங்களில் உள்ள விரிவான வகைப்பாடம் படித்து முடித்ததும் பின்னால் கொடுக்கப்பட்டுள்ள 1. கோடிட்ட இடங்களை நிரப்புக, 2. சரியான விடையைத் தேர்ந்தெடு 3. குறுகிய விடையளி போன்றவைகளுக்கு நாம் விடையை புத்தகத்திலேயே குறிக்க வேண்டும்.

iii. பள்ளிப்பாடப் புத்தகங்களைப் படித்து முடித்த பிறகு தேவைப்பட்டால் விருப்பப்பட்ட Market Guide மற்றும் பிற வகைகளில் நமக்கு கிடைக்கும் கொள்குறி வினா வங்கிகளை வாங்கி அதிலுள்ள வினாக்களுக்கு விடையளித்து பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

**6. எவ்வாறு குறிப்புகள் தயார் செய்வது?** (How to prepare notes)?

ஒவ்வொரு புத்தகத்தையும் படிக்கும் போது முக்கியமான குறிப்புகளை தனியாக நீள நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைக்க வேண்டும்.

(உ.ம்) வரலாறு, புவியியல், அறிவியல் என்று தனித்தனியாக நோட்டுப்புத்தகத்தில் குறிப்புகள் எடுக்க வேண்டும். அவ்வாறு குறிப்புகள் எடுக்கும் போது Margin அதிகமாக விட வேண்டும். ஏனென்றால், இது தொடர்பாக கூடுதல் விஷயங்கள் வேறு ஒரு புத்தகத்திலிருந்து கிடைக்கும் போது அதை இதில் பின்னர் சேர்த்துவிட (Addition) எதுவாக இருக்கும்.

**7. கலந்துரையாடல்** (Discussion)

வாரத்தில் இரு முறை 3 முதல் 5 நண்பர்கள் ஒன்று சேர்ந்து குழுவாக அமர்ந்து பொது அறிவுப் பாடங்களை கலந்துரையாடல் செய்ய வேண்டும்.

இவ்வாறு கலந்துரையாடல் செய்வது நமக்குள் இருக்கும் பாட சந்தேகங்களை தெளிவாக்கும் மற்றும் நேர்முகத் தேர்வை எதிர்கொள்கின்ற அச்சத்தையும் நீக்கும்.

**8. மாதிரித் தேர்வு எழுதுதல்** (Writing of Model Examinations)

நண்பர்கள் குழுவாக சேர்ந்து TNPSC பழைய வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி மையங்களில் கொடுக்கப்பட்ட வினாத்தாள்கள் போன்றவைகளை சேகரித்து மாதிரித் தேர்வு எழுதி தங்களுக்குள்ளேயே விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய வேண்டும்.

மேற்கண்ட பாடத் தொகுப்பினை சரியான வழிமுறையோடு படித்து, தேர்வில் வெற்றி பெற உதவும் வழிமுறைகளை பின்பற்றினால் போட்டித் தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர் கொண்டு எளிதாக வெற்றி பெற இயலும்.

தன்னம்பிக்கையும், சரியான முயற்சியும், முறையான பயிற்சியும் இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இத்தேர்விற்கான பாடத்தொகுப்பின் அடிப்படையில், உங்களுக்கு தேர்வுக்கு பயன்படும் வகையில் மாதிரி வினாக்கள் நாளை முதல் வெளிவரும்.